# கழகத் தலைவர் எடுக்கும் முடிவுகளுக்குத் துணை நிற்போம்!

## தேர்தலில் ஓய்வின்றி உழைத்திட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்குப் பாராட்டுகள்!

# ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை எழுச்சியோடு கொண்டாடுவோம்!

## கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

## மக்களின் பாதுகாப்புக்கு புதிய அரசு முக்கியத்துவம் தரவேண்டும்!

**சென்னை, மே 25–**

**தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (23.5.2026) அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.**

தி.மு.க. இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-



**தீர்மானம் : 1**

**வாக்களித்த மக்களுக்கு நன்றி.**

நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகம் மீதும், கழகத் தலைவர் அவர்கள் மீதும் நம்பிக்கை வைத்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்த 1கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் : 2**

**கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி!**

2026 சட்டமன்றத் தேர்தலில், கொள்கை உறுதியோடு மதச்சார்பின்மை சக்திகளை ஒன்றிணைத்து ‘மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை’ உருவாக்கி, தேர்தல் களத்தில் நம்மையெல்லாம் வழிநடத்தி, முதன்மை தொண்டராய் ஓய்வில்லாமல் உழைத்து, 73 சட்டமன்றத் தொகுதிகளில் நம் கழகக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற முதன்மை காரணமாக விளங்கிய நம் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் : 3**

**இளைஞர் அணி நிர்வாகிகளுக்குப் பாராட்டுகளும் நன்றிகளும்!**

2026 தேர்தல் களத்தில், தாய்க் கழகத்துடன் இணைந்து கழகத் தலைவர் மற்றும் இளைஞர் அணிச் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி ஓய்வில்லாமல் உழைத்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் : 4**

**இளைஞர் அணிக்கு வாய்ப்பளித்த கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி**

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகம் சார்பில் போட்டியிடுவதற்கு இளைஞர் அணியின் மீது நம்பிக்கை வைத்து, நமது நிர்வாகிகளுக்கு வாய்ப்பளித்த நம் கழகத் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியையும், வெற்றிபெற்ற நிர்வாகிகளுக்கு பாராட்டுகளையும் இந்தக் கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் : 5**

**எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்துகள்!**

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் இருந்து இரண்டாவது முறையாக வெற்றிபெற்ற கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பு வழங்கி, வழிநடத்தும், கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றியையும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் இளைஞர் அணிச் செயலாளர் அவர்களுக்கு வாழ்த்துகளையும் இந்தக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் : 6**

**ஜூன் – 3 முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் – சிறப்பாகக் கொண்டாடுவோம்!**

ஜூன் - 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை, கருப்பு - சிவப்பு கொடியேற்றி, ஏழை எளிய மக்களுக்கு உதவிகள் வழங்கி, இளைய தலைமுறைக்கும் சென்றுசேரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்றுச் சாதனைகளை சமூக வலைத்தளங்களில் வீடியோக்களாகப் பகிர்ந்து சிறப்பாக கொண்டாட கழகத் தலைவர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். அதன்படி கழக இளைஞர் அணி சார்பில் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை மக்களுக்கு பயன்படும் வகையில் எழுச்சியுடன் கொண்டாட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 7**

**கழகத் தலைவர் அவர்கள் எடுக்கும் முடிவுகளுக்குத் துணை நிற்போம்!**

தேர்தல் களத்தில் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்ததற்கான காரணத்தைக் கண்டறிய கழக நிர்வாகிகள் - உடன்பிறப்புகள் - பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரின் கருத்துகளையும் கேட்டறிய இணையதளம் ஒன்றை துவக்கியதோடு, தொகுதிதோறும் சென்று நேரடியாக அனைவரையும் சந்திக்கவும் ஆய்வுக்குழுவை நியமித்திருக்கிறார்

நம் கழகத் தலைவர் அவர்கள். கழகத் தலைவர் அவர்களின் இந்த முன்னெடுப்புகளுக்கு நன்றி தெரிவிப்பதோடு, கழகத் தலைவர் அவர்கள் கழகத்தில் மேற்கொள்ளவிருக்கும் அனைத்துவகை மறுசீரமைப்பிற்கும் கழக இளைஞர் அணி துணை நிற்பதோடு, வரும் காலங்களில் கழகத் தலைவர் அவர்கள் இடும் கட்டளைகளை - பணிகளை தொய்வின்றி நிறைவேற்றி, கழகப் பணியை மென்மேலும் வீரியத்துடன் மேற்கொள்ள உறுதியேற்கிறோம்.

**தீர்மானம் : 8**

**முதுகில் குத்திய காங்கிரஸ் கட்சிக்குக் கண்டனம்!**

கடந்த பல தேர்தல்களிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் போட்டியிட்டுப் பல சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றது காங்கிரஸ். அவர்கள் கட்சியில் இருப்பவர்களை வைத்து களப்பணி செய்யாத நிலையிலும் காங்கிரஸ் வெற்றிபெறக் காரணம் கழக உடன்பிறப்புகள்தான் என்பதை யாருமே மறுக்க முடியாது! மறைக்க முடியாது!

நடந்து முடிந்த தேர்தலிலும் தி.மு.க.வி னரின் உழைப்பினால் 5 சட்டமன்ற உறுப்பினர்களை வென்றனர். தேசிய கட்சியாக இருந்துகொண்டு தேர்தலுக்கு முன்பாகவே மாநிலக் கட்சியான தி.மு.க. உறுப்பினர்களின் வாக்குகளால் மாநிலங்களவை உறுப்பினர் பதவியையும் பெற்றனர்.

இத்தனையும் பெற்றுக் கொண்டு, ஒரு நன்றி கூட சொல்லாமல், நன்றி உணர்ச்சியும் இல்லாமல் ஒரே இரவில் அணி மாறிச் சென்றிருக்கின்றனர். பழம்பெரும் பேரியக்கம் அரசியலின் அடிப்படை நாகரிகத்தைக் கூட கடைப்பிடிக்க முடியாத அளவுக்கு, பதவி ஆசை அவர்களின் மூளையை மழுங்கடித்துவிட்டது.

அடுத்தவர் உழைப்பில் ஒட்டுண்ணியாய் உண்டு கொழுப்பதும், தன் தேவைக்கேற்ப கொள்கை மறந்து துரோகம் புரிவதும் காங்கிரசுக்குப் புதிதில்லைதான். இன்று நமக்குச் செய்த துரோகத்தை, நாளை பதவி கொடுத்த

புதிய கூட்டாளிக்கும் செய்வார்கள். பயணிக்கும் படகிலேயே ஓட்டை போடும் அறிவாளிகள்தான் காங்கிரஸ் கட்சியினர்.

தி.மு.க. ஆட்சியமைக்க வேண்டும் என விரும்பிய மக்களின் வாக்குகளால் தான் இன்று அவர்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளார்களே தவிர, இது அவர்கள் தங்கள் சொந்தச் செல்வாக்கினால் பெற்ற வெற்றியல்ல என்பதைக்கூட உணராமல், வரலாறு படைத்துவிட்டதாக உளறுகிறார்கள்.

சொந்த உழைப்பில் ஒருநாளும் வெற்றி பெற முடியாமல், நம்பியவர்களுக்கெல்லாம் துரோகமிழைக்கும் அறமில்லாத காங்கிரஸ் கட்சிக்கு இந்தக் கூட்டம் தனது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

**தீர்மானம் : 9**

**ஆட்சிப் பொறுப்பேற்ற 13 நாளில் தமிழ்நாடெங்கும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு! மக்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்திடுக!!!**

பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட அனைவரது பாதுகாப்பையும் உறுதி செய்திட பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்த கழக அரசு மீது விஷமப் பிரசாரங்கள் மற்றும் பொய்ப்பிரச்சாரங்கள் செய்து, சேற்றை வாரி வீசியவர்கள் இன்றைக்கு ஆட்சியில் அமர்ந்திருக்கிறார்கள்.

இவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் எங்கு பார்த்தாலும் கொலை கொள்ளை பாலியல் வன்கொடுமை போன்ற குற்றச்செயல்கள் தலைவிரித்தாடுகின்றன..

கோவையில் 10 வயது சிறுமி கடத்தி காட்டுமிராண்டித்தனமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

= புதுக்கோட்டையில் நீதிமன்றத்தில் ஆஜராக வந்த சிறுவன் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளான்.

= வந்தவாசியில், ஓடும் லாரியில் 14 வயது சிறுமி கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

- படப்பை அருகே இரட்டைக் கொலை.
- தூத்துக்குடியில் மது தகராறில் கொலை.
- சேலத்தில் மாணவர் அடித்துக் கொலை.
- மணலி புதுநகர் பகுதியில் பிரசாந்த் என்பவர் வெட்டி படுகொலை.
- விச்சூர் கிராமத்தைச் சேர்ந்த 21 வயதான இளைஞர் ஓட ஓட விரட்டிக் கொலை எனக் குற்றப் பட்டியல் நீள்கிறது.

பொறுப்பேற்ற 13 நாட்களிலேயே முப்பதுக்கும் மேற்பட்ட கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நிகழ்ந்து இன்று தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு தறிகெட்ட செய்திகள் வருகின்றன.

ஆனால், முதலமைச்சர் கோட்டைக் கழற்றினார், கூலிங் கிளாஸ் போட்டார், பொலிரோ கார் ஓட்டிப் பார்த்தார், பேட்டரி காரில் பவனி வந்தார் என்ற ரீல்ஸ்களால் இவற்றைத் திசை திருப்ப பார்க்கிறார்கள்.

இந்த வெற்று விளம்பர நடவடிக்கைகளுக்குப் பதிலாக முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்து மக்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும் எனவும், ரீல் ஆட்சியை நிறுத்தி, ரியல் நிர்வாகத்தை வழங்க வேண்டும் எனவும் தி.மு.க. இளைஞர் அணியின் நிர்வாகிகள் கூட்டம் வலியுறுத்துகிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### கழகத் தலைவர் வழிகாட்டுதலின்படி

## தகவல் தொழில்நுட்ப அணி ஆக்கப்பூர்வமான பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளும்!

### அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடந்த காணொளி கூட்டத்தில் திட்டவட்டம்!

சென்னை, மே 25-

திமுக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணை செயலாளர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மே 22 அன்று அணியின் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி ராஜா அவர்கள் தலைமையில் காணொளி வாயிலாக நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அணியின் இணை செயலாளர், ஆலோசகர்கள், துணைச் செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



தேர்தல் களத்தில் தகவல் தொழில்நுட்ப அணி ஆற்றிய பணிகள் குறித்தும், கழகத் தலைவர் மற்றும் இளம் தலைவர் ஆகியோரின் ஆலோசனைப்படி தொடர்ந்து மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்தும் இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. நிறை குறைகளை நேர்மையுடன் எதிர்கொண்டு, அவதூறுகளைப் புறந்தள்ளி ஆக்கப்பூர்வமாகத் தொடர்ந்து செயல்படுவதற்கான ஆலோசனைகளை அணிச் செயலாளர் வழங்கினார். நிர்வாகிகள் தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

---

## ‘பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யாருக்கெல்லாம் பலன்?’

### மோடிக்கு கார்கே கேள்வி!

புதுடெல்லி, மே.25-

“தற்போதைய பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யாருக்கெல்லாம் பலன் கிட்டுகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வேண்டும்” என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், “ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.100ஐ கடந்துள்ளது. மக்களின் பணம் தவணை முறையில் கொள்ளை அடிக்கப்படுகிறது. ஒரு காலத்தில் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மிகவும் குறைவாக இருந்தது. அந்தக் காலத்தில் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை குறைக்கப்படவில்லை. அப்போது மக்களின் பணம் பகிரங்கமாக கொள்ளை அடிக்கப்பட்டது.

அண்மையில் சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெற்றன. இந்த தேர்தல்கள் முடிந்த உடனேயே பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தியது. அண்மை காலத்தில் 3 முறை விலை உயர்த்தப்பட்டு உள்ளது.

இத்தாலி, ஆஸ்திரேலியா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் கலால் வரியை குறைத்து, பெட்ரோல், டீசல் விலையை கட்டுப்படுத்தி உள்ளன. பிரிட்டன், அயர்லாந்து நாடுகளில் எரிசக்திக்காக சிறப்பு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் தற்போதைய பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யார், யாரெல்லாம் பலன் அடைகிறார்கள் என்பது குறித்து பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வேண்டும்” என்று மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் நீண்ட தொலைவு உள்ளிட்ட காரணங்களால் இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு தினசரி ரூ.1,000 கோடி இழப்பு ஏற்பட்டது. இதை ஈடுகட்ட கடந்த 15ம் தேதி பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு தலா ரூ.3 உயர்த்தப்பட்டது. கடந்த மே 19ம் தேதி ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் தலா 90 பைசா அதிகரிக்கப்பட்டது.

இந்த நிலையில், கடந்த 10 நாட்களில் 3வது முறையாக பெட்ரோல், டீசல் விலை இன்று உயர்த்தப்பட்டது. இதன்படி சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் 82 பைசா உயர்ந்து ரூ.105.31க்கும், ஒரு லிட்டர் டீசல் 87 பைசா உயர்ந்து ரூ.96.98க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

‘வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் இந்தியாவின் 23 நிலையங்களில் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல், டீசல் மீது மத்திய அரசு கலால் வரியை விதிக்கி றது. மாநில அரசுகள் வாட் வரியை விதிக்கின்றன. எண்ணெய் நிறுவனங்கள் சார்பில் பெட்ரோல் நிலைய உரிமையாளர்களுக்கு 10 சதவீதம் கமிஷன் வழங்கப்படுகிறது.

இவை அனைத்தையும் கணக்கிட்டு பெட்ரோல், டீசல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. எண்ணெய் நிறுவனங்களின் இழப்பை ஈடுகட்ட கடந்த 10 நாட்களில் 3 முறை விலை உயர்த்தப்பட்டு உள்ளது. இதன்மூலம் ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் ரூ. 5 வரை விலை உயர்ந்திருக்கிறது. இதேபோல ஒரு கிலோ சிஎன்ஜி விலை ரூ.4 வரை விலை அதிகரித்திருக்கிறது. விலை உயர்த்தப்பட்டாலும் எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து இழப்பை சந்தித்து வருகின்றன’ என்று எண்ணெய் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.